
வெளியீடு எண் 164.

மோட்டார் வான் நெ. 2



# இன்பம்:

631



தருமபுர ஆதீனம்.

உ

குருபாதம்



631

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

இருபத்தைந்தாவது மகா சந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

ஆணையால் வெளி வருவது.

1948.

# இன்பம்

631

631

எழுதியவர் :
ஆதீனக்கல்லூரிப் பேராசிரியர்,
ச. தண்டபாணி தேசிகர்.

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணிஅறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நல் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடிஇணையே குறுகினோமே.

—திருநாவுக்கரசர்.

உ

குருபாதம்

## படித்துப் பாருங்கள்.

சமயப் பிரசாரத் தொடக்க விழா இறைவன் அருளால் **நல்வழியின்** பின் இன்பமாக நிகழ்கின்றது. பூவின் மணம் போலஉயிருக்குமணம் சமயம். மணமில்லா மலர் மகிழ்ச்சி தராது. சமயமில்லா உயிரும் அப்படியே ஒழுக்கம் பழக்கம் எல்லாம் சமயமே! உண்மைச் சமய நிலை அமைதியை யளிப்பது. அமைதியில் இன்பம் இருக்கிறது.

ஆதலால் அன்புடையார் இன்பம் பெறுவார்களாக.

# இன்பம்.

எமெல்லோரும் இன்பத்தையே விரும்புகிறோம். எங்கும் இன்பம் என்பதே பேச்சு. பார்ப்பதால் இன்பம். கேட்பதால் இன்பம். உண்பதால் இன்பம். நுகர்வதால் இன்பம். தொடுவதால் இன்பம். ஆகவே, இன்பம் என்பது நம்முடைய கண், காது, மூக்கு நாக்கு, உடல் வழியாக உயிர் அடையும் களிப்பே. கண் முதலிய ஐந்தும் இன்ப வழிகள். இவற்றைப் **பொறிகள்** என்று சாத்திரம் கூறும். இந்தப்பொறிகள் உருவம் முதலிய பொருள்களைச் சென்று பற்றும். அப்பொருள்களே **புலன்கள்**. ஆகவே பொறிகள் புலன்களைச் சென்று பற்றும்போது உண்டாகும் கலப்பிலே விளையுங் களிப்பே **இன்பம்** என்பது.

அந்தக் கலப்பிற்கு ஏதாவது தடை யுண்டானாலோ, கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் போனாலோ, கலப்பு மிகுந்தாலோ, குறைந்தாலோ ஒருவெறுப்பு உண்டாகும். அதுதான் **துன்பம்.**

ஒரு மனிதனுடைய முயற்சியும் இருவகையில் எழும்புகிறது. ஒன்று இன்பத்தைப் பெற. மற்றொன்று துன்பத்தை நீக்க. இந்த இரண்டில் இன்பத்தைப் பெறுவது மாத்திரம் இன்பமாகாது. துன்பத்தை நீக்குவதும் இன்பமே. இந்த இரண்டும் ஒன்று சேர்ந்த இன்பந்தான் இன்பமாகும். மனித முயற்சி இந்த இரண்டிற்குமாகத்தான். மனிதன் இன்பவெறியால் எத்தகைய துன்பத்தையும் பொருட்படுத்துவதில்லை. உருக்குத் தொழிற்சாலைகளில் செக்கச் செவேலென்று பழுக்கக் காய்ந்த இரும்பைக் கையாற்பிடித்துக் கம்பி இழுக்கிறான். உறைபனியில் உடல்வெடிக்கச் செல்கின்றான். கொந்தளிக்கும் கடலில் குடல் நடுங்கிக்கொண்டே செல்கின்றான். பத்துப்பனை யுயரத்திலிருந்து பதட்டமில்லாமல்

பாய்கின்றான். எல்லாம் எதனால்? இன்ப வெறியால்தானே!

இவ்வண்ணம் பண்டிதர்களை, பாமரர்களை, ஞானியை மயக்கி நிற்கும் இன்பக்களி சிறப்பது எங்கே? ஒருவன் மன உழைப்போ உடல் உழைப்போ இல்லாமல் குந்தியிருந்து உண்கிறான். அவனுக்குச் சோற்றைக் கண்டால் பிடிப்பதில்லை. காலை எட்டு மணியும் பன்னிரண்டு மணியும் இரவு எட்டுமணியும் இடைவேளையும் சாப்பிடச்சொல்கிறது. மணிக் கணக்குக்காகச் சாப்பிடுகிறான். பசிக்காகச் சாப்பிடுவதில்லை. அவனுக்குச் சுவையுள்ள உணவு நஞ்சாகிறது. ஒருவன் எட்டு மணி நேரம் கொத்துகின்றான். வெட்டுகிறான்; படிக்கிறான்; பாடுகிறான்; பசி வயிற்றைக் கிள்ளுகிறது. சாதம் வருகிறது. என்ன ஆனந்தம். இலைக்கு வருமுன்னே ஆகாரக்குடல் அசைவுண்டாகி தயாராகிக்கொள்கிறது. வாய்நீர் சுரந்து உணவைக் கரைக்கத் தயாராகிவிடுகிறது. அமுத உணவை ஆனந்தமாகச் சுவைக்கிறது. இவ்

வாறே எல்லா இன்பங்களிலும். ஆதலால் இன்பம் சிறப்பது எங்கே? துன்ப நுகர்ச்சியின் பிறகுதானே. பனியால் வாடிய தாமரையே இளவேனிலை நோக்கி மகிழ்கிறது.

இத்தகைய துன்ப நீக்கமும் இன்பப் பேறுமே மனித வாழ்க்கை. பொழுது விடிந்து பொழுது போகும்வரை மனிதன் இதற்காகவே பாடுபடுகிறான். பாடுபடுகிறவன் இருந்து சாப்பிடுகிறவனைப் பார்த்து 'என்ன இவனுக்கும் சாண் வயிறு, நமக்கும் சாண் வயிறுதானே. நான் உழைக்கவேண்டும். இவன் மட்டும் உட்கார்ந்து உண்ணவேண்டுமா?' என்று எண்ணுகிறான். உடனே போராட்டம் தொடங்குகிறது. எங்கே? உழைப்பவன் மனத்தில். உடனே உழைப்பாளிகள் பலரைக் கூட்டி உணர்த்துகிறான். உழைப்பாளிகள் திரண்டு எழுகின்றனர். அதனால் பாதிக்கப்படுகின்றவன் தடுக்கின்றான். உடனே மனப்போராட்டம் வாய்ப்போராட்டமாக வளர்ச்சியடைகின்றது. அது முற்றிக் கைப்போராட்டம்

கத்திப் போராட்டம், அணுக்குண்டுப் போராட்டம் ஆகிறது. நாட்டுப்போராட்டம் அரசியற்போராட்டம் எனப் பெயர் சூட்டிக் கொள்ளுகின்றது. நாட்டை நாசமாக்குகின்றது. இத்தகைய போராட்டத்திலேயே மனிதன் உருவாகிறான். போராட்டத்தாலேயே போகத்தை விரும்புகின்றான். போகம் அல்லது இன்பம் என்பது போராட்டத்திலே விளைவதா? அன்புகனிந்த இடத்தில்விளைகின்ற போகத்தை ஆத்திரம் கனிந்த இடத்தில் அடையஎண்ணுகிறானே. என்ன புத்தி! போராட்டத்தால் விளையும் இன்பத்தை ஒருவன் அடைத்தால் மற்றொருவன் தடுக்கிறான். மற்றவன் என்னதான் சாமர்த்தியமாக நடந்தாலும் தானே தடையேற்படுகிறது. அந்தத் தடைகள் யாரால் உண்டாயின? என் உண்டாயின? எப்படி உண்டாயின? என்று என்னதான் ஊகித்தாலும் சொல்லமுடிவதில்லை. பெருமுயற்சி செய்தும் பெற முடியாத இன்பங்களும் உண்டு. சிறு முயற்சியினாலே பெரிய இன்பங்கள் விளைதலும் உண்டு.

இவற்றையெல்லாம் இருந்து நோக்கினல் - ஊன்றி அறிந்தால் - நமது பகுத்தறிவுக்கும் அப்பாற்பட்டதொரு சக்தி வேலைசெய்கிறதென்பது நன்கு தெரியும். அந்தச் சக்திதான் ஊழ்வினையின் சக்தி. அந்த வினையின் வன்மையை வெல்லவேண்டும். வென்றால் தடையில்லா இன்பங் கிட்டும். வெல்ல நம்மால் மட்டும் முடியாது. தக்க துணையம் வேண்டும். குருடனுக்குக் குருடன் வழி காட்டினற்போலத் துணையும் வினைபிடித்த துணையாக இருந்தால் பயனுண்டா? வினை விண்ட துணையாக இருக்கவேண்டுமல்லவா? வினைவிண்ட துணைதான் **கடவுள்**. அது தான் எல்லாவற்றையும் கடந்த பொருள். அதை இன்பக்காலத்தும், துன்பக்காலத்தும், எங்கும், என்றும் துணையெனக் காண்பதே **சமயம்** அல்லது மதம் அல்லது கொள்கை.

சமயந்தான் அலையும் மனத்திற்கு அமைதியளிப்பது; பொறாமை, கோபம், தாபம் முதலான மனப்

புயலைப் போக்கிச் சாந்தியளிப்பது; தன்னலத்தைப் போக்கிப் பொதுவான அன்பை வளர்ப்பது.

உண்மையான சமயத்தில் போட்டியில்லை; பொறாமையில்லை; உயர்வு இல்லை; தாழ்வு இல்லை; வேண்டாதவன் இல்லை; வேண்டியவன் இல்லை; இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

என் கடவுள் பெரிது, உன்கடவுள் பெரிது என்ற எண்ண வேற்றுமைகள் சமயக் கொலைக்களத்திற் காணப்படும் முட்புதர்கள். பெரிய அனலுக்கு முன் ஈரமில்லை. அதுபோல ஆண்டவன் சந்நிதியில் வேற்றுமைக்கு - சிறுமைக்கு - மறத்திற்கு - இடமேயில்லையென்பதும் துணிபு.

உலகத்திலுள்ள எந்தச் சமயமும் நீ ஏழையாகவே இரு, அரைப்பட்டினியால் அவதிப்படு, கிடைத்த காசை என்போரற் செலவழித்துவிட்டு உன் உணவுக்காக வருந்து என்று சொல்லவில்லை. உழை புசி.

பாடுபட்டு வீடு பெறு. செம்பொன் தேடு இன்பம்நாடு. என்றே சொல்கின்றன.

எந்தச் சமயமும் உயிர்ச் சுதந்திரத்தை மறுப்ப தில்லை. அறிவுக்கு அடிமையாகு என்று மட்டும் சொல்கின்றது. பொன்னுக்காக, பொருளுக்காக, ஆட்சிக்காக அடிமையாகாதே. நாமார்க்கும் அடிமை யல்லோம். நமனுக்கும் அஞ்சோம் என்றுதான் சொல்கின்றன.

எந்த மதமும் நீ முட்டாளாகவே முன்னேற்ற வுணர்ச்சி, அறிவு வளர்ச்சி, ஆராய்ச்சி வன்மை யின்றியே இருந்துவிடு, நீ கல்லுக்குச் சமம், என்று சொல்லவில்லை. படி படி என்றே சொல்லுகின்றன. அதாவது நெற்கதிர், பால்முற்றி மணி முதிர முதிரத் தலை வணங்குவதுபோல நீ படிக்கப் படிக்கத் தானே படிவாய் என்கிறது.

எந்த மதமும் 'ஆராய்ச்சிக்கு இடந்தராத மூடப் பழக்கத்தைப் பரம்பரை பரம்பரையாக அப்படியே

கடைப்பிடித்து நட' என்று கட்டாயப்படுத்தவில்லை. உலகப்பொருள்களை ஆராய்வதே ஆராய்ச்சி என்று எண்ணாதே, கண்ணாடிக் குழாய்களை உடைப்பதே கருத்துஎன்று எண்ணாதே, அணுக்குண்டுஆராய்ச்சியே அறிவின் எல்லை என்று எண்ணாதே, உன்னை ஆராய்ந்தாயா? உன் உடலை ஆராய்ந்தாயா? நீயும் உன் உடலும் சேர்ந்ததன் காரணத்தை ஆராய்ந்தாயா? சேர்த்தவனை உனக்குத் தெரியுமா? அவனைத் தெரியாதபடி உன் வியாபகமான அறிவைத்தடுத்திருக்கின்ற தடையைப் பற்றித்தான் உனக்கேதாவது தெரியுமா? என்ற ஆராய்ச்சி ஞானத்தை நுணுகி நுணுகி யதிகப்படுத்துகின்றது. இத்தகைய சமய உணர்ச்சி நாட்டுக்கு எவ்வளவு தேவை என்பதைச் சற்று சிந்தியுங்கள். தான் பிழைக்கத் தெரியாதவன தம்பி பிழைக்க வழி காட்டின கதைபோலத் தன்னைப்பற்றி ஆராயத் தெரியாதவன் எப்படி பிறவற்றைப்பற்றி ஆராய முடியும்? அப்படி யாராய்ந்தால்தான் அது எந்த அளவு பயன் தரத்தக்கதாக இருக்கும்?

இயற்கையில் தோய்ந்து, இயற்கையில் வளர்ந்து, இயற்கையேயாய தமிழர்கள் கண்ட தலைசிறந்த நாகரிகம் என்ன? சமய உணர்ச்சிதானே. சமயமில்லாத தமிழ் நாகரிகம் எங்கிருக்கிறது? தமிழ் வரலாற்று முதல் நூலாகிய தொல்காப்பியம் நிலத்தைப் பகுத்த போதே நிலத்தின் இயல்புக்கேற்ப தெய்வத்தையும் வகுத்ததே.

அவ்வாறாகப் பலவாயிரமாண்டுகளாகத் தமிழுடலில் உயிராக விளங்குகின்ற சமய உணர்ச்சியின் வளர்ச்சிக்கு ஒரு ஒழுங்குவேண்டும் ஒழுங்கில்லா வாழ்க்கை மழுங்கும். ஒழுங்கு திட்டத்தைக்கொண்டு வளர்வது. திட்டமில்லா வாழ்க்கை மட்டமே.

ஒருவன் விழித்ததுமுதல் திரும்பப் படுக்கும் வரை திட்டமான ஒழுங்குடனிருக்கவேண்டும். இந்த விதிகள்தாம் **மதச் சடங்குகள்** - அவைகளைக் கூறுவன சாத்திரங்கள்.

'காலையில் 5-மணியளவில் எழுந்தால் சுகம்' என்ருல், 'எழுந்தவுடன் மனத்தைப் பலவிடங்களில் அலையவிடாது ஒரு இடத்தில் ஒடுக்கிப்பழக ஒரு பொருளைத் தியானி' என்ருல், 'மலசலத்தைத் தூரக் கழி, சுகாதாரத்தைக் கெடுக்காதே' என்ருல் தண்ணீரில் குளி, சுத்தமான ஆடையுடுத்து; தூய்மையான உணவை உண்' என்ருல் இவை பொதுச் சுகாதாரத்தை ஒட்டிச்சொன்ன புத்திமதிகள் தாமே.

கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், இவற்றையே இத்தகைய சமயம், தனது திட்டமான சட்டமாகக் கொண்டிருக்கிறது என்பது வெளிப்படை.

ஏற்பதிகழ்ச்சி, சோம்பியிருப்பது தொலையாப் பாவம், ஓயாத்தூக்கம் ஒழியாத்துன்பம், ஆதலால் நன்ருக உழைக்கவேண்டும் ஊதியம் நிரம்பப் பெற வேண்டும், பெற்ற ஊதியத்தைக்கொண்டு பெருகிய இன்பத்தை எய்தவேண்டும். தொழிலில் ஏற்றத்

தாழ்வில்லை. அடியார்களில் பல தொழிற் பெருமக்கள் இருந்தார்களே. அவர்களில் கடவுள் முன்னிலையில் ஏற்றத் தாழ்வு காட்டப்பெற்றதா? ஆதலால் எல்லோரும் ஓர் குலம், ஓர் இனம், உடன் பிறந்தவர்கள் என்று சமயச் சட்டம் காணப்படுகிறதல்லவா? இது தனி மனிதன் பொருளாதாரம் தானா? அதையா வளர்க்கின்றது! நாட்டுப்பொருளாதாரமே உயரவில்லையா? ஒத்த மனத்தால் வளர்வது அன்புநெறி. அன்பு நெறியே சமய வாழ்வு. உண்மையான சமயத்தில் உயர்வு இல்லை, தாழ்வு இல்லை, ஏழை இல்லை, செல்வரில்லை, என்னது இல்லை, உன்னது இல்லை, எல்லாருக்கும் எல்லாம் சொந்தம். இத்தகைய பொதுவாழ்வை நமக்கு அளித்து வருகின்ற சமயம் நமக்குத் தேவையில்லையா?

மனிதனுக்கு ஞானம் அவசியம். ஞானம் இல்லாதவன் ஊனம். அந்த ஞானத்தைக் கல்வியாலல்லது அடைய முடியாது. கல்லார் நெஞ்சில் நில்லான்

நசன். கல்வியில்லாதவன் சமய விரோதி. ஆதலால், மனமாகிய அகலில், உணர்ச்சியாகிய எண்ணெய் இட்டு, ஊக்கமாகிய திரி பொருத்தி, ஞானமாகிய நல் விளக்கை ஏற்றி, அறியாமையாகிய இருளைப் போக்குங்கள், போக்குங்கள் என்று சொல்லுகின்ற சமய நிலை தேவையா? இல்லையா?

கல்வி என்பது புத்தகக் குறிப்புக்களைப் புத்தியில் அமைத்துக்கொள்வது மாத்திரமல்ல. உண்மையான கல்வி, உள்ளத்தில் ஒன்றி, உணர்ச்சியாக - ஒளியாகப் பிரதிபலிப்பது. அத்தகைய ஒளிக் கல்வியே கடவுளுணர்ச்சி. உண்மையான கல்விக்கு ஒழுக்கம் உயிர். வரம்புகளும் கட்டுப்பாடுகளுமே கை கால் முதலிய உறுப்புக்கள் உறுதியே உள்ளம். நம்பிக்கையே உணர்ச்சி. ஆசார சீலங்களே இதயத் துடிப்புக்கள். நாம் அறிந்தனவற்றைக் காட்டிலும் அறிய வேண்டுவன பலவுள. எல்லாம் அறிந்த பொருள் நம்மையும் நம் அறிவையும்

கடந்துள்ள கடவுள் ஒருவரே என்று துணிந்து, அவரை நினைத்திருப்பதே **தொழில்** என்று, தற்போதைய நிலையிலும் மேலும்மேலும் உயர்ந்து நிற்க வழி காட்டுவதே **சமயக் கல்வி.**

இவ்வண்ணம் இம்மையில் மக்களுக்குத் தேவையான எல்லா வகையான வாழ்க்கைத் திட்டங்களையும் வகுக்கும் சமயத்திற்கும் பிரசாரம் தேவையான காலமும் வந்தது, அறிவாளிகள் யாவருக்கும் வியப்பைத் தருவதாகும். ஆம். மனிதனுக்கு உணவு மிக அவசியம். 'உணவு உழவின் பயன். உணவின்றி மனிதன் உயிர் வாழமுடியாது. அப்படியிருந்தும் உணவைப் பெருக்குங்கள், உணவைப் பெருக்குங்கள் என்ற பிரசாரமும் நாட்டில் நடக்கவில்லையா? அது போல மக்கள் தங்கள் கடமையிலிருந்து தவறினாலும். மறந்தாலும், சமயங்களில் சில அழுக்குகள் படிந்து உண்மை மறைந்தாலும், பிரசாரத்தைச் செய்து விளக்க வேண்டியது அவசியந்தானே?

ஆகவே சமயங்கள் எவ்வளவு உயர்ந்த தத்துவங் களை விளக்கிக்கொண்டிருந்தாலும் அதனை விளக்கம் செய்யப் பிரசாரங்களும் தேவையே என்பது புலனு கின்றது. **வைரத்திற்கும் விளம்பரம் இல்லை யானுல் விற்குமா?**

ஆதலால் சமய உண்மைகளை உணர்ந்து மனித நிலையிலேயே தெய்வத்தன்மையை அடைவோம், நிலைத்த இன்பம் நம்முடையது, **இன்பமே எந் நாளும் துன்பம் இல்லை** என்பது நமது சமயந்தந்த வீரமொழி. அதனைத் துணைக்கொண்டு உறுதி பெறுவோமே.

**என்று மின்பம் பெருகு மியல்பினுேடு**
**ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட**
**மன்றுளா ரடியார் அவர் வான்புகழ்**
**நின்றது எங்கும் நிலவி யுலகமெலாம்.**

— சேக்கிழார்.